செ.வெ.எண்:76 நாள்:30.08.2019

# அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் குடிமராமத்துத் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.டி.ஜி.வினய், இஆப., அவர்கள் ஆய்வு.

அரியலூர் மாவட்டத்தில் பொதுப்பணித்துறை நீர் வள ஆதாரத்துறையின் சார்பில் விளாங்குடி, மல்லூர், அருங்கால், கல்லக்குடி மற்றும் பொய்யூர் ஆகிய கிராம்ஙகளில் நடைபெற்று வரும் குடிமராமத்துத் திட்டப்பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது:-**

அரியலூர் மாவட்டம், அரியலூர் ஒன்றியம், விளாங்குடி ஓடையில் ரூ.29.50 இலட்சம் மதிப்பீட்டில் அணைக்கட்டு புனரமைக்கும் பணி மற்றும் கரைகள் பலப்படுத்தும் பணி மற்றும் தூர் வாரும் பணியினையும், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், மல்லூர் கிராமத்தில் உள்ள மாணிக்கவாசகர் ஓடையில் ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் 613 மீட்டர் நீளமுள்ள வடிகாலினையும், பழுதடைந்துள்ள அணைக்கட்டினையும் புனரமைக்கும் பணியினையும், புதிய அணைக்கட்டு ஒன்று புதுப்பிக்கப்பட்டு வரும் பணிகள் நடைபெற்று வருகிறது.

பின்னர், கல்லக்குடி பெரிய ஏரியில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் ஏரி புனரமைக்கப்பட்டு வரும் பணிகளையும், ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் அருங்கால் ஓடை அணைக்கட்டு புனரமைக்கும் பணியினையும், பொய்யூர் கல்லார் ஓடையில் தடுப்பணை புனரமைக்கும் பணியினையும், பார்வையிட்டு, ஆய்வு செய்யப்பட்டது. மேலும், இப்பணிகள் அனைத்தும் மழைக்காலங்களில் முன்னதாக விரைந்து முடிக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, செயற்பொறியாளர் (பொதுப்பணித்துறை, நீ.வ.ஆ) டி.தட்சணாமூர்த்தி, உதவி செயற்பொறியாளர் வை.வேல்முருகன் (அரியலூர்) மற்றும் பாசனதாரர் சங்க உறுப்பினர்கள், விவசாயிகள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**